விலை: சதம் 60

உறுதியான
பொலித்தீன் பாக்


100 மில்க் வைற் நீல சோப் உறை
அல்லது 10 பார் சோப் அல்லது
10 சலவைப் பவுடர்
மேலுறைகளை அனுப்பி
நல்லரகமான உறுதியுள்ள
பொலித்தீன் பாக்கை
பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

# ஈழநாடு
THE EELANADU

உற்சாகமும் புத்துணர்வும்பெற
பாவியுங்கள்!
அண்ணா கோப்பி
மின்சார றோஸ்டரில்
உங்கள் முன்னிலையில்
வறுத்து அரைத்த

அண்ணா கோப்பியை
வேண்டிய அளவில்
பெற்றுக்கொள்ள
விஜயஞ்செய்யுங்கள்.
அண்ணா கோப்பிக் கடை
யாழ்ப்பாணம் - சுன்னாகம்

மலர்23 வைகாசி 32 ஷஃபான் 11 இதழ் 120
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 14-6-1981



யாழ். நகரில் இடம்பெற்ற வன்செயல்களின் போது (1) 31-05- 1 இரவு தீக்கிரையான யாழ். எம். பி. யின் வீட்டின் மேல் தோற்றம். (2) 1-06-81 இரவு முழுவதுமாக எரிந்துபோன யாழ் பழைய மார்க்கட். (3) 1-06-81 இரவு தீக்கிரையான "ஈழநாடு" பத்திரிகை அலுவலக கட்டிடத்தின் தோற்றம். கூரை இழந்த நிலையில் பின்பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட படம் இது. (படங்கள் ஏ வி எம்.)

யாழ்ப்பாணத்தில் உயர்மட்டப் பொலிஸ் குழுவினர்:

# முழு அளவில் விசாரணை; இன்று இடங்களை குழு பார்வையிடும்

## சேதவிபரங்களும் மதிப்பீடு செய்யப்படும்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் கடந்த மாதம் 31-ம் திகதி முதல் தொடர்ச்சியாக சில தினங்கள் நடைபெற்ற வன்செயல்கள் தொடர்பாக உயர்மட்டப் பொலிஸ் குழு விசாரணை இன்று ஆரம்பமாகிறது.**

பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில நேற்று மாலை யாழ்ப்பாணம வந்துள்ள பதினறு பேர் கொண்ட இப்பொலிஸ் குழு; யாழ்ப்பாணத்தில் மே 31 ம் திகதி முதல் சில தினங்கள் வரை நடைபெற்ற கொலை, கொள்ளை, தீவைப்பு, தாககுதல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்தும்.

இவ்விசாரணையின் முதற்கட்டமாக உயர் மட்டப் பொலிஸ் குழு, சம்பவம் நடைபெற்ற இடங்களை இன்று நேரில் பார்வையிடும்.

### உயர்மட்டக்குழு

பதினறு பேர் கொண்ட பொலிஸ் விசாரணைக்குழுவில் 1. பிரதிப்பொலிஸ்மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் (தலைவர்), 2. பொலிஸ்அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரிய, 3. பொலிஸ் அதிபர் திரு. ஜி பி. திஸநாயக்க, 4. உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஐ. ரி. கனகரத்தினம், 5. உதவிப் பொலிஸ் அதிபர் திரு. சி. கனகசிங்கம், 6. உதவிப்

[6ம் பக்கம் பார்க்க]

# தமிழர் கூட்டணி எம். பிக்கள் உண்ணாவிரதம்!

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. க்கள் இம்மாதம் இருபத்தொராம் திகதி ஞாயிற்றுக்கிழமை முழுநாள் உண்ணாவிரதம் மேற்கொள்வார்கள்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ்ப்பாண வன்செயல்கள் தொடர்பாக பாராளுமன்றத்தில் தெரிவித்த ஐந்து கோரிக்கைகளையும் வென்றெடுக்கும் நோக்கத்துடன் இந்த உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படுவதாக கூட்டணித்தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

உண்ணாவிரதம், 21ம் திகதி காலை தந்தை செல்வா நினைவாலயத்தில் மேற்கொள்ளப்படும்.

யாழ். வன்செயல்கள்

# ஐந்து பொலிஸார் தற்காலிக வேலைநீக்கம்

[கொழும்பு]

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பாக ஐந்து பொலிசார் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கீழ்ப்படியமறுத்தது. ஒழுங்கும் கட்டுப்பாடும் குலைவதற்குக் காரணமாக இருந்தது ஆகிய குற்றச்சாட்டுகள் மீது இவர்கள் மீது நடவடிக்கை

[6ம் பக்கம் பார்க்க]

# புங்குடுதீவில் கரைஒதுங்கிய இந்தியப் படகில் திருட்டு!

[ஊர்காவற்றுறை]

இயந்திரக்கோளாறு காரணமாக புங்குடுதீவில் கரை ஒதுங்கிய இந்திய மீனவர்களின் படகொன்றிலிருந்து பெறுமதி மிக்க இயந்திர உபகரணங்கள் திருடப்பட்டுள்ளன.

இராமேஸ்வரத்திலிருந்து ஐந்து மீனவர்களுடன் மீன் பிடிக்கச்சென்ற படகு இயந்திரக்கோளாறு காரணமாக புங்குடுதீவில் கரையோதுங்கிய தென்றும் இதன் பின்னரே இத்திருட்டு நடைபெற்றுள்ளதாகவும் ஊர்காவற்றுறைப் பொலிசில் முறையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

இராமேஸ்வரத்திலிருந்து 5 மீனவர்களுடன் புறப்பட்ட 'ஆரோக்கிய புனிதா' என்ற படகு இயந்திரக் கோளாறு காரணமாக புங்குடுதீவில் கரை ஒதுங்கியதும் இராமேஸ்வரச் [illegible] அந்த மீனவர்களை ஊர்காவற்றுறை பொலிசில் ஒப்படைத்தார் இச்சம்பவம் அறிந்து ஊர்காவற்றுறை வந்த இப் படகின் உரிமையாளர் திரு. கே. ஆர். ஹூர்துசாமி; பொலிசாருடன் படகைப் போய்ப் பாத்தபோது அதிலிருந்தபெறுமதிமிக்க யந்திரஉபகரணங்கள் திருடப்பட்டிருந்தனவாம்.

இச்சம்பவம் பற்றி பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர். (கு)

விளம்பர அறிவித்தல்

சகல விளம்பரங்களும், இன்று முதல் மறு அறிவித்தல் வரை கலாநிலையம் அச்சகத்திலுள்ள "ஈழநாடு" கிளை அலுவலகத்தில் இரவு ஒன்பது மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

303, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 7707

# வரி விளம்பரம்

## தேவை

சியாக்காய் பவுடர், பற்பொடி ஒட்டுவதற்கு பெண் பிள்ளைகளும், மற்றும் 'தேவஸ்' தயாரிப்புக்களை விற்பனை செய்வதற்கும் ஆட்கள் தேவை. தேவாஸ் இறைண்டிங் மில், 159, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0015

## தவறிவிட்டது

447120 தொடர் இலக்க ஒன்பது உணவு முத்திரைகள் 12-6-81-ல் யாழ். புகையிரத நிலையத்திற்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் புகையிரத நிலைய சந்தியில் உள்ள தவரத்தினம் ஸ்ரோஸ் உரிமையாளருடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் தரப்படும் 0019

## Patrician Industrial Institute

59, ST. PATRICK'S ROAD. JAFFNA

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 17-6-81

● MOTOR MECHANISM ● ELECTRICAL WIRING ● WELDING

(செய்முறை, அறிமுறை பயிற்சி உட்பட)

குறிப்பிட்ட தொகை மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்

தொடர்புகொள்ளவும்.

பதிவாளர். (0004)

## டில்கா வாச் வேக்ஸ் வாடிக்கையாளர்களுக்கு அறிவித்தல்

அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட நிர்வாக சிக்கல் காரணமாக எம்மிடம் மணிக்கூடு தந்த வாடிக்கையாளர்கள் உடனடியாக எமது ஸ்தாபனத்துக்கு வரும்படி வேண்டுகிறோம்.

இங்ஙனம்
உரிமையாளர்
எஸ். சற்குணநந்தன்.

0013

## ரும்ரெட் | 65

பூரணமாக வெங்காய களைகளை கட்டுப்படுத்துகின்றது என்பதை முத்தையன்கட்டைச் சேர்ந்த திரு. க. இராமச்சந்திரன் கூறுகின்றார்

10 இரு. றப்பர் அடைப்பில் உள்ள ரும்ரெட் களைக்கொல்லியை (1/2 ரு. – 8 அவு.) 3 கலன் நீரில் கலந்து வெங்காயம் புதைத்து அடுத்தநாள் தெளித்தேன் இன்று (5-6-1981) 45 நாளாகியும் களைகள் ஏதும் முளைக்கவில்லை. ரும்ரெட் ஒரு சிறந்த களைக்கொல்லி லசோவுக்கு நிகராகவே களைகளை கட்டுப்படுத்துகின்றது.

### வெங்காயக் களைக்கொல்லி




ரும்ரெட் முத்தையன்கட்டு, ஊரிக்காடு ஆகிய இடங்களில் சோதனைகள் மூலம் வெங்காயக் களைகளை நன்கு கட்டுப்படுத்துகின்றது என நிரூபிக்கப்பட்டுள்ளது.

2½—3 அவு. ரும்ரெட் 1 கலன் நீரில் கலந்து ஏக்கருக்கு 48 கலன் வீதம் தெளிக்கவும்.

ரும்ரெட் வெங்காயம் புதைத்து 3 தினங்களுக்கிடையில் பாவிக்கவும்

அக்றி கோலாஸ்

கொழும்புக்கிளை:
173, கெய்ஸர் வீதி,
கொழும்பு-11.

(0011)

ஊரிக்காடு
வல்வெட்டித்துறை.

## யாழ்ப்பாணம் சம்பவம்:

# 'முரசொலி'யில் வெளிவந்த கருணாநிதியின் கடிதம்

யாழ்ப்பாணச் சம்பவங்கள் குறித்து சென்னையிலிருந்து வெளிவரும் ''முரசொலி'' பத்திரிகையில் (6-6-81) தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி எழுதிய கடிதத்தின் சில பகுதிகள் வருமாறு:

''இலங்கை நாடாளுமன்றத் தமிழ் உறுப்பினர் யோகேஸ்வரன் வீட்டுக்குத் தீவைக்கப்பட்டதாகவும், தமிழர் கட்சி அலுவலகம் தாக்கப்பட்டதாகவும், சிங்களப் பொலிசார் சாதாரண உடையில் தமிழர்கள் மீது தொடர்ந்து தாக்குதலை நடாத்திவருவதாகவும் வந்துள்ள செய்திகளை விட; வராத செய்திகள் அதிகமென்றும், பாதுகாப்புப்படையினரே பாராளுமன்ற உறுப்பினர் வீட்டுக்குள் நுழைந்து ஒரு பாலகனைச் சுட்டுக் கொன்றார்கள் என்றும் தமிழர் பிணங்கள் விழுந்துகொண்டேயிருக்கின்றன என்றும் இலங்கையிலிருந்துவரும் தகவல்கள் நம் இதயத்தை பிழிந்தெடுக்கின்றன!

''இலங்கை முழுவதும் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டுள்ளது இராணுவத்தின் ஆதிக்கத்தில் இலங்கை பூமி விடப்பட்டிருக்கிறது! கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழர் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களும் மற்றும் சில நாடாளுமன்றத் தமிழர் உறுப்பினர்களும் அதிபர் ஜெயவர்த்தன அவர்களின் ஆணைப்படி விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

''இவையனைத்தும் ஏதோ உரிய நடவடிக்கைகள் எடுத்ததைப் போலத் தோற்றமளித்தாலும் மனிதாபிமான நடவடிக்கைகள் இதுவரையில் தக்கவகையில் மேற்கொள்ளப்படவில்லை என்பதை வேதனையுடன் சுட்டிக்காட்ட வேண்டியவனாக இருக்கின்றேன்.

''மாடாக உழைத்து இலங்கைத் தீவுக்கோர் மகிமையைத் தந்த தமிழின மக்கள் இன்று மண்ணில் நெளியும் புழுவாக மிதிக்கப்படுகின்றனர்

'எத்தனை இன்னல்கள் உனக்கு! எத்தனை தடவைகள்! எத்தனை ஆண்டுகளாக!

'இந்த இருள் விடியவே விடியாதா? விமோசனம் பிறக்கவே பிறக்காதா?

'மத்திய அரசைப் பொறுத்தவரையில் இது இன்னொரு நாட்டுப் பிரச்சினை! மிகக் கவனத்துடனும் ஜாக்கிரதையுடனும் தான் அணுகிட வேண்டும்! நாம் அறியாததல்ல! ஆனால் மனிதாபிமானப் பிரச்சினை! ஐந்துகோடி

(5-ம் பக்கம் பார்க்க)

## பின்னுறுதிக் கட்டளைக்கான அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றம்.

கீரிமலையைச் சேர்ந்த காலஞ்சென்ற முத்துக்குமாரு சண்முகநாதன் பெண் சிவநேசரத்தினத்தின் மரணசாதனமற்ற சொத்துக்கள் பற்றிய விடயத்தில்,

மரணமெய்தியவர்.

முத்துக்குமாரு சண்முகநாதன், பொன்னுவீதி, கீரிமலை.

மனுதாரர்.

வழ. இல. தத்துவம்: ரி/93.

எதிர்

1. சண்முகநாதன் மகள் கேதாரகௌரி
2. சண்முகநாதன் சோமசுந்தரன்
3. சண்முகநாதன் இவ சக்திசுந்தரன்
4. சண்முகநாதன் மகள் ஸ்வர்ணகௌரி, எல்லோரும் பொன்னுவீதி, கீரிமலை.

(பராயமடையாதவர்கள்)

எதிர் மனுதாரர்கள்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981ஆம் ஆண்டு ஆனி மாதம் 26ஆந் நாளன்று முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
மூ. நல்லலிங்கம்
பதிவாளர்.

1981ஆம் ஆண்டு ஆனி மாதம் 1ஆம் நாள்.

தயாரித்தவர்
வி. எஸ். கணேசலிங்கம்
மனுதாரர் சட்டத்தரணி.

0006

## லங்கா சித்த ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி யாழ்ப்பாணம்.

### இறுதிப்பரீட்சை

மேற்படி கல்லூரியின் இறுதி (D A M) பரீட்சை ஜூலை மாதத்தில் நடைபெறும்.
பரீட்சை எடுக்க விரும்புவோர் உடனடியாகக் கல்லூரிப் பதிவாளருடன் தொடர்பு கொள்ளவும்.

127, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

ஆணைக்குழு,
மேற்படி கல்லூரி.
0020

## அறிவித்தல்

இம்மாதம் முதலாம் திகதி இரவு விளைக்கப்பட்ட அசம்பாவிதங்களால் தீக்கிரையாக்கப்பட்ட எமது

"தர்மேந்திரன்ஸ்" அடைவுக்கடை

தனது சேவையை தற்காலிகமாக

11, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்

என்ற இடத்தில் தொடரவுள்ளது.
எமது வாடிக்கையாளர்கள், எடுப்பு வைப்புக்களை அவ்விடத்திலே செய்துகொள்ளலாம் என்பதை அறிவிக்கின்றோம்.

0012

# ஈரானில் பூகம்பம்!

## 5,000 மக்களை காணவில்லை

தெஹ்ரான், ஜூன் 13 ஈரானின் தென்கிழக்குமாகாணமான ஹேர்மனில் இடம்பெற்ற பயங்கரபூகம்பத்தில் சுமார் 5000 பேர் காணாமல் போயிருக்கலாம் என அலுவலக செய்தியாளிகளால் கூறப்பட்டிருக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பூகம்பத்தின்போது பல வீடுகள் சேதமடைந்துள்ளன. ஈரானின் ஹேர்மன் நகரம் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நகரத்திலுள்ள சுமார் 40,000 மக்கள் பூகம்பத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதாக ஹேர்மன் மாகாண கவர்னர் தெரிவித்துள்ளார். (வெ

## ஜனாதிபதி போவார்

(கொழும்பு)

அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸினதும் சீமாட்டி டயானாவினதும் நடைபெறவிருக்கும் திருமணத்தில் கலந்துகொள்ள ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா பயணமாவாரென்று தெரிகின்றது. எலிசபெத் மகாராணி விடுத்த அழைப்பை ஏற்று ஜனாதிபதி ஜயவர்த்தனாவும் பாரியாரும் அங்கு செல்லவிருக்கிறார்கள். இத்திருமணத்தின்போது உலகநாடுகள் பலவற்றின் தலைவர்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஈரான் ஜனாதிபதி கொலை முயற்சி?

தெஹ்ரான், ஜூன் 13 "என்னைப் படுகொலைசெய்வதற்குச் சதித்திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. ஈரானில் இடம்பெற்றுவரும் அடக்குமுறை ஆட்சிக்கெதிராக மக்கள் போராடவேண்டும்."

மேற்கண்டவாறு ஈரான் ஜனாதிபதி ஜனாப் பானிசதர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"ஈரானின் ஜனாதிபதி பதவியைக் கைப்பற்றுவதற்கு புரட்சிச்சபை சதி முயற்சி ஒன்றை மேற்கொள்ளவுள்ளது. என்னைப் படுகொலை


(5ம் பக்கம் பார்க்க)





# இவர்கள் இன்னும் எவ்வளவோ வளர வேண்டி இருக்கிறது.

உங்கள் பிள்ளைகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் வளர்ந்து வருவதைக் கண்டு மகிழ்ச்சியில் திளையுங்கள்.
மறவாதீர்கள்! வளரும் பருவத்தில் திடகாத்திரமான உடலுறுதியைப் பெற இவர்களுக்கு மேலதிக போஷாக்குச் சக்தி தேவை.
உங்கள் பிள்ளைக்கு கிறீம் சுவைமிக்க நெஸ்பிறே கொடுங்கள். உலகின் வளம்மிக்க பண்ணைகளில் இருந்து கிடைக்கும் நெஸ்பிறே 28% கொழுப்பும் விற்றமின் 'ஏ', 'டி' சத்துகளும் கொண்டிருப்பதால் வளரும் உடலுக்கு வலிமையூட்டுகிறது.




400 கிராம். ரூ. 22/50

ஒரு கிலோ ரூ. 65/00

Nestlé®
ஒரு நெஸ்லே தயாரிப்பு

நெஸ்பிறே ... வளரும் பிள்ளைக்கு வளமூட்டும் பால்.

Grant E. & E. 3903

பாராளுமன்றத்தில்

# யாழ். சம்பவங்கள் பற்றி 'அமிர்' கொடுத்த விளக்கம்

(நமது சபை நிருபர் மாலி)

"இந்த நாசகாரச்செயல் அத்தனைக்கும் பொறுப்பாக இருந்த பொலிஸ்படை உடனடியாக வாபஸ்பெறப்படுவதோடு, அரசாங்கம் தமிழ் பேசும் பிரதேசங்களில் சகல பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரிகள், சிரேஷ்ட அதிகாரிகளையும், குறைந்தது 75 சதவீதமான பொலிஸ் படையினரையும் தமிழர்களை நியமிக்க வேண்டும்.

"ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அபிவிருத்தி சபைகளின் கீழ் பொலிசாருடன் இணைந்து பொதுமக்களின் உயிரையும் உடைமைகளையும் பாதுகாக்கும்விதத்தில் உள்ளூர் பாதுகாப்பு படையொன்று அமைக்கப்படவேண்டும்.

"கொலைக்கும் கொள்ளைகளுக்கும் பொறுப்பான இராணுவத்தினர் உடனடியாக வாபஸ்பெறப்பட்டு தேவையான பாதுகாப்புக்குத் தேவையான எண்ணிக்கையினர் மாத்திரம் முகாம்களில் நிறுத்தப்படவேண்டும்.

"யாழ்ப்பாணத்தில் நடந்த சில தினங்களாக நடந்த சம்பவங்களையும் மனித உரிமைமீறல்களையும் சர்வதேச மன்னிப்புச்சபை அல்லது சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு போன்ற தகுந்த சர்வதேச நிறுவனம் ஒன்று முழு விசாரணைகளை நடாத்தி என்ன நடவடிக்கைகளை அவற்றின்மீதும் அத்தகைய சம்பவங்கள் இனிமேல் நிகழாதிருக்கவும் எடுக்கவேண்டும் என்பதைத் தெரிவிக்க அத்தகைய நிறுவனத்துக்கு அரசாங்கம் அனுமதியளிக்கவேண்டும்.

"சம்பந்தப் பட்டவர்களை அடையாளம் கண்டு தகுந்த தண்டனையும் பாதிக்கப் பட்டவர்களுக்கு உடன் நிவாரணமும் அளிக்கப்பட வேண்டும்.

அமிர் விடுத்த கோரிக்கை

"இந்தக் கோரிக்கைகளின் மீது தகுந்த நடவடிக்கைகளை எடுத்தாலொழிய அல்லது எடுக்கும்வரை தமிழர்விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாம், ஏனைய எதிர்க்கட்சிகளுடன் இணைந்து யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தல் நடைமுறைகள் தொடர்பாக கொண்டுவரவிருக்கும் தம் பிரேரணை மீதான விவாதம் தவிர வேறு எப் பாராளுமன்ற அமர்வுகளுக்கும் வரமாட்டோம் என்பதுடன் எந்தச் சட்டவாக்க நடவடிக்கைகளிலும் கலந்துகொள்ளமாட்டோம்"

இவ்வாறு யாழ்ப்பாணச் சம்பவங்கள் பற்றி பாராளுமன்றத்தில் ஒத்திவைப்புப் பிரேரணை மீது பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் குளுரைத்தார்.

யாழ் சம்பவங்கள்

யாழ்ப்பாணச் சம்பவங்களை சபையில் விளக்கிய திரு. அ. அமிர்தலிங்கம் அங்கு கூறியதாவது:

"சபாநாயகர் அவர்களே! யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு வாரமாக மே 31ம் திகதியில் இருந்து நேற்றுவரை நடைபெற்ற துன்பியல் சம்பவங்களுடன் தொடர்புள்ள சில விடயங்களை நான் இச் சபைமுன் வைக்கிறேன். இவை, அமைதியையும் சமாதானத்தையும் விரும்பும் அனைவரும் ஆழ்ந்து கவனிக்கவேண்டியவை. அந்தவேளைநடைபெற்ற வன்முறை நடவடிக்கைகளை நாமோ அல்லது சட்டத்துக்கு அமைவான எவரோ கண்டிக்காமலிருக்கமுடியாது. இவ் வன்முறைச்சூட்டுச் சம்பவங்களுக்கும் கொலைகளுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எவ்வித தொடர்பும் இல்லை; நாம் அவற்றை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தேர்தல்பிரசாரக் கூட்டம்

மே 31ம் திகதி யாழ். நாச்சிமார் கோவிலடியில் கூட்டணியின் தேர்தல்பிரசாரக்கூட்டமொன்று யாழ் மேயர் விசுவநாதன் தலைமையில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் சில அசம்பாவிதங்கள் நிகழ்ந்தன. அப்போது திருகோணமலையிலிருந்த நான் யாழ் திரும்பியதும் இவை பற்றி விசாரித்ததில் அச் சம்பவத்தின்போது இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இரு பொலிசார் கொலையுண்டிருக்கிறார்கள். இருவர் காயமடைந்திருக்கிறார்கள். இதுபற்றி முரண்பட்ட தகவல்கள் கிடைக்கின்றன. இறந்த ஒருவரான சார்ஜன் கனகசுந்தரம் தன்னை மற்றொரு சார்ஜன் சுட்டதாகத் தமது மனைவியிடம் கூறியதாக நான் அறிகின்றேன். வைத்தியருக்களித்த முறைப்பாட்டிலும் அவர் அவ்வாறு கூறியிருப்பதாக நான் அறிகின்றேன். இவை எவ்வளவு உண்மை என்பதை நான் அறியேன். பொலிஸ் மா அதிபர் இரு இளைஞர்கள் இப்பொலிசாரைச் சுட்டதாக அன்றிரவு எனக்குத் தொலைபேசியில் கூறினார். இவை விசாரிக்கப்பட்டு தண்டனைக்குட்படுத்தப்பட வேண்டியவை. இதில் எனது கட்சி அக்கறையற்றதாகவிருக்கிறது. நாமே தான் இதைச் செய்தோம் என்று நியாயமான எவரும் எண்ணிவிட முடியாது. நாமே எமது கூட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்த எத்தனித்திருக்க மாட்டோம். அத்துடன் அபிவிருத்தி சபைத்தேர்தல்களில் நாம் மிகுந்த அக்கறையாகவும் இருந்தோம். இளைஞர்கள் பலர் எதிர்த்தபோதும் - அதன் விளைவாக மானிப்பாய் உறுப்பினரின் 'ஜீப்' தீக்கிரையாக்கப்பட்டபோதும் - நாம் இத் தேர்தல்களில் அக்கறையோடு போட்டியிட்டோம்.

மேடை நோக்கி அந்த சார்ஜன்ட்

"சூட்டுச் சத்தம் கேட்டதும் சார்ஜன்ட் கனகசுந்தரம் மேடையை நோக்கி வந்தார். தான் சுடப்பட்டதாகவும் கூட்டத்தை நிறுத்தி மக்களைப் போகச் சொல்லுமாறும் தன்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லும்படியும் அவர் மேயர் விசுவநாதனைக் கேட்டார். மேயர் கூட்டத்தைக் கலைத்து மக்கள் சென்றுகொண்டிருந்தபோது மற்ற இரு பொலிசார் காயமுற்றிருந்தனர். ஒருவர் இறந்து காணப்பட்டார்.

"இவை நிகழ்ந்த அரைமணி நேரத்தில் 'ஜீப்'களிலும் 'ட்ரக்'குகளிலும் சீருடையிலும், சிவில் உடையிலும் பெருந்திரளானோர் அங்கு வந்தார்கள். வந்தவர்கள் கோவிலுள் புகுந்து அட்டகாசம் புரிந்தார்கள். வாகனங்கள், மணிகள், கதவுகள் சேதப்படுத்தப்பட்டன. தேருக்கு தீமூட்ட முயற்சிக்கப்பட்டது. கோபுரம் தீமூட்டப்பட்டது. அண்டை வீடுகள் சேதப்படுத்தப்பட்டன, சார்ஜன்ட் கனகசுந்தரத்தை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்ற கார் உட்பட இரு கார்கள் தீமூட்டப்பட்டன. 5 வீடுகள் எரிக்கப்பட்டன. பின்னர் இக் கும்பல் பஸ் ஒன்றில் பெரிய கடையை அடைந்தது முதலில் அவர்கள் அங்குள்ள சுப்பையா அன் கம்பனி வெளிநாட்டு மதுபானக் கடையை உடைத்து பெருமளவு மதுபானத்தை உட்கொண்டபின்னர் ஆஸ்பத்திரி வீதியில் மணிக்கூட்டு வீதிவரை சகல கடைகளையும் தீவைத்து நாசமாக்கினர். 'ஒட்டோஸ்' பெற்றோல் நிலையத்தை உடைத்து தீவைப்புக்கு வேண்டிய பெற்றோலை எடுத்தார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் சபையில் சிரிப்பும் கூச்சலும் எழுந்தது அப்போது திரு அமிர்தலிங்கம்; "சபாநாயகர் அவர்களே சிலருக்கு இச்சம்பவங்கள் நகைப்புக்கிடமாக இருக்கலாம். இவர்களின் விளைவுகள் எத்தன்மை எப்படியிருப்பினும் இவற்றை இங்கு எடுத்துக் கூறவேண்டியது எனது கடமை" என்று சொல்லித் தொடர்ந்தார்.

கடைகள் எரிந்தன:

"புதிய சந்தையும், பழைய சந்தையும் எரித்து நாசமாக்கப்பட்டன. ராணி தியேட்டரிலிருந்து மின்சார நிலைய வீதியிலுள்ள கடைகளும் தீவைக்கப்பட்டன.

எம் பி வீடு தீக்கிரை

அதன் பின்னர் இக்கும்பல் யாழ் எம். பி. திரு. யோகேஸ்வரன் இல்லத்துக்குச் சென்றது உறுப்பினர் இங்கு இருக்கிறார் கும்பலில் சிலர் சீருடையில் சென்றார்கள். பூட்டப்பட்டிருந்த வெளி 'கேட்'டை துப்பாக்கியால் தகர்த்து உள்ளே சென்றார்கள். வீட்டிலிருந்த

(5-ம் பக்கம் பார்க்க

"2-ம் எதிரியைக் கல்யாணம் முடிக்க

# கமலம் சம்மதிப்பார் என்று நான் பார்த்துக் கொண்டிருந்தேன்"

## 1-ம் எதிரி ராஜன் தொடர்ந்து சாட்சியம்

(நமது புலோலி நிருபர் திருச்செல்வம்)

"2ம் எதிரி ஆனைவிழுந்தான் சந்தியில் வைத்து கமலத்திடம் தான் உன்னைக் கலியாணம் முடித்து வீட்டிற்குக் கூட்டிப்போவதற்காகத்தான் இங்கு கூட்டிவந்தேன் எனக் கூறிய போது கமலம் தான் சகோதரனைத்தான் உண்மையாக விரும்புவதாகவும் தன்னைக் கலியாணம் முடிக்கும் நோக்கத்துடன் தான் இங்கு கூட்டிப்போவதாக ஏற்கனவே சொல்லியிருந்தால் தான் கூடவந்திருக்க மாட்டார் என்றும் சொன்னார்."

பொலிகண்டி டியூட்டறி மாணவி கமலம் இராமச்சந்திரன் கொலைவழக்கு விசாரணையில் நீதிமன்றத்திற்கு உதவியாக ஆஜரான சட்டத்தரணி திரு. எம். சோமசுந்தரத்தினுல் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது 1ம் எதிரி ராஜன் இவ்வாறு குறிப்பிட்டார். இக் கொலைவழக்கு விசாரணை மீண்டும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

1980ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ந் திகதிக்கும் 22ந் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பொலிகண்டி டியூட்டறி மாணவி கமலம் இராமச்சந்திரனை ஆனைவிழுந்தான் மயானத்திற்கு அண்மையில் வைத்துக் கொலைசெய்தார்களெனவும், கொலையுண்டவர் அணிந்திருந்த 3,600 ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையடித்தார்களெனவும் பருத்தித்துறையைச் சேர்ந்த கந்தசாமி இராஜ்குமார் (இராஜன்) அல்லது வீரப்பன், அவரது தமையனான பொன்னையன் பெர்னாண்டோ (ஜெமி) அல்லது ஜெயசேகர் ஆகியோர்மீது குற்றஞ்சாட்டி பருத்தித்துறை பொலிசார் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர்.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி பா. சுப்பிரமணியமும், 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி கே. குமாரசாமியும், நீதிமன்றத்திற்கு உதவியாகச் சட்டத்தரணி எம். சோமசுந்தரமும், பொலிசாருக்கு உதவியாக சட்டத்தரணிகளான எஸ். சண்முகசுந்தரம், எஸ். சிவஞானசுந்தரம் (காண்டீபன்), செல்வி எல். சி. பிலிப், உமா துரைலிங்கம், சந்திரா சச்சிதானந்தன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது 1ம் எதிரி குறிப்பிட்டதாவது:

2-ம் எதிரி இறந்த கமலத்தை ஒரு தனிமையான இடத்திற்குக் கூட்டிவரும்படி சொன்னதன் காரணமாகவே நான் கமலத்தை ஆனைவிழுந்தான் சந்திக்குக் கூட்டிப்போனதாக முன்பு சாட்சியமளித்துள்ளேன். 1980 பெப்ரவரி 20-ம் 21-ம் திகதிகளில் நானும் 2-ம் எதிரியும் கமலத்தைக் கூட்டிப் போவது பற்றிக் கலந்தாலோசித்தோம். 21-ம் திகதி மாலை கமலத்தைச் சந்திப்பதற்காக பஸ் நிலையத்திற்கு வந்தோம். நாங்கள் கமலத்தைக் கூட்டிக்கொண்டு போவதற்குத் தனிமையான நல்ல இடம் வல்லிபுரக்கோவிலடி என்று நினைத்தோம். 2-ம் எதிரி வல்லிபுரக் கோவிலடி தனிமையான நல்ல இடமென்று யோசனை கூறியபடியாலேயே நான் அங்கு கமலத்தைக் கூட்டிப்போக ஒப்புக்கொண்டேன். ஆனைவிழுந்தான் வல்லிபுரக் கோவிலுக்கு அண்மையில் இருக்கின்றது வல்லிபுரக்கோவிலுக்கும் ஆனைவிழுந்தானுக்கும் இடைத்தூரம் சுமார் கால் மைல் தூரம் இருக்கும்.

கமலத்தைக் கூட்டிப்போக...

"பெப்ரவரி 21-ம் திகதி நான் பஸ்நிலையத்திற்கு வந்தது கமலத்தை வல்லிபுரக் கோவிலடிக்குக் கூட்டிப் போவதற்குத்தான் அதே போல் 2ம் எதிரியும் பஸ் நிலையத்திற்குக் கமலத்தை வல்லிபுரக்கோவிலடிக்குக் கூட்டிப் போவதற்காகத்தான் வந்தார் நான் இறந்த கமலத்தை பஸ் நிலையத்தில் சந்தித்து ஒருபியுடன் கதைக்க வேண்டும் தனியான இடத்திற்கு அதாவது வல்லிபுரக் கோவிலடிக்குப் போகவேண்டும் என்று சொன்னபோது கமலம் ஒத்துக்கொண்டு என்னுடன் வல்லிபுரக்கோவிலடிக்கு வந்தார். ஆனைவிழுந்தான் வல்லிபுரக்கோவிலடி என்று தான் நாங்கள் கருதுவோம், ஆட்களும் அப்படித் தான் சொல்வது வழக்கம்.

"இப்போது எனக்குத் தெரியும் கமலத்திற்கும் 2-ம் எதிரிக்கும் எதுவிதமான காதலும் இல்லை என்பது ஆனைவிழுந்தான் சந்தியை அடைந்ததும் கமலத்தை 2-ம் எதிரியுடன் கதைக்க விட்டு நான் சற்று தூரத்தில் நின்றேன். அவர்கள் கதைத்துக்கொண்டு நின்றார்கள் அப்போது 2-ம் எதிரி கமலத்திடம் நான் உன்னைக் கலியாணம் முடித்து வீட்டிற்குக் கூட்டிப்போவதற்காகத்தான் கூட்டிவந்தேன் என்றுசொன்னார். அப்போது கமலம் தான் சகோதரனைத் தான் உண்மையாக விரும்புவதாகவும் தன்னைக் கலியாணம் முடித்து வீட்டிற்குக் கூட்டிப் போகும் எண்ணத்துடன் தான் கூட்டிப் போவதாக ஏற்கனவே சொல்லியிருந்தால் தான் கூடவந்திருக்க மாட்டேன் என்றும் என்னுடன் (1-ம் எதிரியுடன்) 2-ம் எதிரி சிநேகிதமாக இருந்த காரணத்தால் தான் நான் 2-ம் எதிரியுடன் வஞ்சகமில்லாமல் விளங்கியதாகவும் சொன்னார். இவ்வாறு கமலம்

(5ம் பக்கம் பார்க்க)

## தர்மத்தாய் தண்டிப்பாள்

நீதி தவறிவிட்டார் திட்டுரம் செய்துவிட்டார்
ஒளி உணரவைக்கும் உயர்கல்வி தானளிக்கும்
ஆதி வரலாற்றை அத்தாட்சி செய்துதரும்
மூத்த நிரூ°நூல்களுள்ள நூலகத்தை எரித்துவிட்டார்

பார்த்த விடமெல்லாம் பயங்கரமாய்த் தீமெரிய
சேர்த்த பொருளெல்லாம் சாம்பராய்ப் பறந்தோட
வார்த்தையில் வர்ணிக்க முடியாத வன்செயலால்
சீர்மிகுந்த யாழ் நகரைச் சிதைத்துவிட்டார்
சிறுமதியர்

சட்டத்தின் காவலர்கள் தீயிட்ட சங்கதியைச்
சட்டமிட்டுச் செய்தியாய் தந்துவிட்ட காரணத்தால்
மட்டற்ற கோபமுடன் மாண்புமிகும் "ஈழநாட்டை"
திட்டமிட்டுத் தீயிலிட்டார் தர்மிஷ்டர் ஆட்சியிலே!

தர்மிஷ்ட ஆட்சியென்று தம்பட்டமடிக்கும் நாட்டில்
தர்மத்தை வீழ்த்திவிட்டுத் தம்மிஷ்டம் ஆடுவோரை
வர்மத்தால் இனமழிக்க வன்செயல்கள் செய்வோரை
தர்மத்தாய் இன்னொருநாள் தண்டித்தே
தீர்வாளம்மா!

—வளாலாயூர் சே. சிவசம்பு

ஹரன்-யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
Shaft's Big Score
Color
Adults Only

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்
தாய்க்கு ஒரு பிள்ளை

வெஸ்லி (காங்கேசன்துறை)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
கல்யாண ராமன்

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி 10 30, 2-30 6-00
ரஜனிகாந்த் - லதா
ஆயிரம் ஜென்மங்கள்

லிடோ யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-00
அழியாத கோலங்கள்
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ ஸ்ரீதேவி
ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
பட்டாக்கத்தி பைரவன்
(வண்ணப்படம்)

சாந்தி (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள் 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி-விஜயா-மேஜர்-பாலாஜி-தேங்காய்
தர்மராஜா
யப்பானில் படமாக்கப்பட்ட, சராட்டிச்சண்டைக் காட்சிகள் நிறைந்த வண்ணப் படம்!

ராணி (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30 6-00
ஜெய்சங்கர் ★ ஷோபா
ஸ்ரீபிரியா ★ சுமன்
சௌகார் ஜானகி நடித்த
நீ

மனோகரா தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - லதா - ராதாசலுஜா நடித்த
இதயக்கனி

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, 2-30, 6-15
சிவாஜி கணேசன் - கே. ஆர். விஜயா
ரிஷிமூலம்

ராஜா யாழ்ப்பாணம் சில தினங்கள் மட்டும்
தினசரி காலை 10-30, 2-30, 6-00
● பாக்கியராஜ் ● ரதி ● சுதிர்
புதிய வார்ப்புகள்
(வண்ணப் படம்) வயது வந்தவர்களுக்கு உகந்தது


# கமலம் சம்மதிப்பார் ....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்த்துக் கூறியது எனக்குக் கேட்டது. அப்படி இருந்த போதிலும் 2-ம் எதிரி கமலத்தை மீண்டும் மீண்டும் வற்புறுத்தி கலியாணம் முடிக்குமாறு கேட்டுக்கொண்டிருந்தார். அதற்கெல்லாம் கமலம் இடைவிடாது மறுப்புத்தெரிவித்துக்கொண்டிருந்தார். அப்போது நான் 2-ம் எதிரியும் கமலமும் நின்ற இடத்திலிருந்து சுமார் 15 யார் தூரத்தில்நின்றேன். பின்னர் 2-ம் எதிரி கமலத்தை வெருட்டுவதற்காக கமலத்தின் கழுத்தை பிடித்து ஏதோ செய்தார். அந்த இடம் வெட்டவெளியான இடமாக இருந்தபடியாலும் நிலா இருந்தபடியாலும் நான் அதைக் காணக் கூடியதாக இருந்தது. 2-ம் எதிரி இப்படி கமலத்தின் கழுத்தைப் பிடிப்பதற்கு முன்னர், கமலத்தின் கையைப் பிடித்ததையும் நான் கண்டேன். அப்போது கமலம் "என்னண்ணை இது" என்று கேட்டு கையை உதறினார். அப்போது நான், ஓடியீ உன்னோடு ஏதோ கதைக்கப்போகிறான், கதை என்று சொன்னேன். பின்னர் கமலம் 2ம் எதிரியின் கையைப்பிடித்துத் திக்குமுக்காடினார்.

## நான் தடுக்கவில்லை

'கமலத்தை 2-ம் எதிரி அப்படி பலாத்காரம் செய்த போதும் நான் ஏன் தடுக்கவில்லை என்றால் கமலம் அது வரை நடந்த விடயங்களைத் தாயிடம்போய் சொல்லியிருந்தால் எனக்கு ஆபத்துவரும் என்று கருதியே. அத்துடன் 2-ம் எதிரி கமலத்தின் கழுத்தைப் பிடித்து வெருட்டுவதால் கமலம் எப்படியும் 2-ம் எதிரியைக் கலியாணம் முடிப்பதற்கு சம்மதிப்பார் என்று எனவேதான் நான் பார்த்துக் கொண்டு நின்றேன். 2-ம் எதிரி கமலத்தின் கழுத்தைக் கொஞ்சநேரம் பிடித்துக் கொண்டு நின்றபோது கமலம் விழுந்துவிட்டார். அப்போது ஒரு வெளிச்சம் வந்ததைக் கண்டோம். கண்டதும் நாங்கள் கமலத்தைத் தூக்கிக் கொண்டு பற்றைப் பக்கம் ஓடினோம். நான் கமலத்தின் கால்களையும், 2-ம் எதிரி கைகளையும் தூக்கிக்கொண்டு சென்றோம். அவ்வாறு தூக்கிச் சென்று ஒரு இடத்தில் கமலத்தைப் போட்டோம். 2-ம் எதிரி அவ்விடத்தில் நின்றார் நான் வந்த வெளிச்சத்தைப் பார்க்க வந்தேன். அப்போது சந்தியிலே 'ஜீப்' ஒன்று வந்து வந்தவேகத்தைக் குறைத்து நின்று பின் சென்றது.

"நான் திரும்பி கமலமும் 2-ம் எதிரியும் இருந்த இடத்திற்குத் திரும்பிப் போனேன். அங்கே அவர்களைக் காணவில்லை. எனவே அவர்களைத்தேடிச் சுடலைப்பக்கமாகப் போனேன். அப்படிப் போய்க்கொண்டிருந்தபோது 2ம் எதிரி என்னைக்கூப்பிட்டுக் கேட்டது. நான் அங்கு போனபோது 2ம் எதிரி முழந்தாளில் குந்திக்கொண்டிருந்து கமலத்தைப் புதைத்துக் கொண்டிருந்தார். நான் நின்ற இடத்திற்கும் 2ம் எதிரி இருந்த இடத்திற்கும் சுமார் 10 யார் தூரமிருக்கும். அவ்விடத்தில் சிறிய மொண்டிப்பற்றைகள் காணப்பட்டன நிலவு சாடையாகவேஇருந்தது. 2ம் எதிரி கமலத்தை மண்ணிக்புதைத்து கமலத்தின் கால்மட்டும் தெரிந்தது. நான் 2ம் எதிரியிடம் கமலத்தை ஏன் புதைக்கிறாய்? என்று கேட்டேன் அதற்கு 2ம் எதிரி கமலம் செத்துவிட்டாள் அவளைப்புதைக்காமல் விட்டால் யாரும் கண்டுவிடுவார்கள். பின்னர் எங்களுக்குப் பிரச்சினைவரும் என்று சொன்னார். கமலத்தின் கைகளும் புதைக்கப்பட்டிருந்தன ஆனால் கைவிரல்கள் மாத்திரம் வெளியே தெரிந்தன அந்த நேரத்தில் கமலத்தின் உடம்பில் இருந்த நகைகளை நான் அவதானிக்கவில்லை.

"பின்பு நானும் 2ம் எதிரியும் மருதங்கேணி-பருத்தித்துறை றோட்டால் முனையை நோக்கிச் சென்றோம். வழியில் எனக்கு மனம்சரியில்லை. நான் எங்காவது ஓடிப்போகவேண்டும். எனவே எனக்குப் பணம் தேவை என்று 2ம் எதிரிக்குச் சொன்னேன். 2ம் எதிரி என்னை எங்காவது வெளியூருக்குப் போகும்படியும், தான் பணம் தருவதாகவும் கூறியதுடன், கமலத்தின் கொலைபற்றி யாராவது கேட்டுத்தன்னிடம் விசாரித்தால் தனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாதென்று சொல்லப்போவதாகவும் சொன்னார்.

யாழ்ப்பாணசம்பவங்கள்:

# மே. ஜெர்மனியில் நாளை கண்டன ஊர்வலம்

பொன், ஜூன் 13

யாழ்ப்பாணத்தில் மேமாதம் 31ம் திகதி முதல் இடம்பெற்ற தீவைப்பு, தமிழ்மக்களின் உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதம், உயிரிழப்புகள் ஆகிய அசம்பாவிதச் சம்பவங்களுக்கு கண்டனம் தெரிவித்து மேற்கு ஜெர்மனியிலுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்இளைஞர்கள் நாளை திங்கட்கிழமை பொன்நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

மேற்கு ஜெர்மனியின் சகல பகுதிகளிலுமுள்ள தமிழ் இளைஞர்கள் அன்று பொன் நகரில் கூடி கோஷங்களுடன் ஊர்வலமாகச் சென்று அங்குள்ள சகல வெளிநாட்டு தூதரங்களையும் சேர்ந்த தூதுவர்களிடம் மகஜர்களைக் கையளிக்கவுள்ளனர்.

மேற்கு ஜெர்மனியிலுள்ள இலங்கைத் தூதுவர் செல்வி லட்சுமி நாகநாதனிடமும் இது சம்பந்தமாக மகஜர் பிரதியொன்று கையளிக்கப்படவுள்ளது.

மேற்கு ஜெர்மன் ஜனாதிபதியிடமும் இவர்கள் தமிழ்மக்களுக்கு இவ்விதமான அட்டூழியங்களிலிருந்து பாதுகாப்பு வழங்குமாறுகோரி மகஜர் சமர்ப்பிக்கவுள்ளனர்.

## யாழ். . ...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் அத்தனை உடைமைகளையும் வீட்டுடன் சேர்த்து எரித்து நசமாக்கினார்கள். அந்தக் கொலைகாரரின் கைகளிலிருந்து யாழ். உறுப்பினரும் அவரது மனைவியும் பின்புற மதிலால் பாய்ந்து தப்பிக் கொண்டார்கள்.

(சபையில் மீண்டும் கூச்சல்)

திரு. அமிர்தலிங்கம் "ஊழையிடுபவர்கள் சென்று இவற்றைப் பார்க்கவேண்டும். அவரின் வீடு சாம்பலாக்கப்பட்டுள்ளது தமது சகா ஒருவருக்கு நேர்ந்த அனர்த்தங்களையாவது இச்சபை உறுப்பினர்கள் அமைதியாகக் கேட்பார்களென்று நான் எதிர்பார்த்தேன் சபாநயகர் அவர்களே!

யாழ். உறுப்பினரின் வீடு முற்றாகவே நாசமாக்கப்பட்டது. அவரது வீடு எரியும்போது வெளியில் சிலர் துப்பாக்கிகளோடு காவல் புரிந்தார்கள். அவரது 'ஜீப்'பும் நண்பரொருவரது காரும் முற்றாக எரிக்கப்பட்டன. உறுப்பினர், தான் அணிந்திருந்த சாரத்துடனும் அவரது மனைவி அணிந்திருந்த 'பெற்றி கோட்' உடனும் அங்கிருந்து தப்பிச்சென்றார்கள். அவர்கள் அணிந்திருந்த உடைகளைத் தவிர அவர்களது உடைமைகள் அனைத்துமே இப்பொலிசாரால் அழிக்கப்பட்டன. பின்னர் கூட்டணி தலைமை அலுவலகத்துக்கும் இதே கதிதான் நேர்ந்தது. அலுவலகத்தைக் கொளுத்திவிட்டு காவல்புரிந்தார்கள் இவை நடைபெற்ற வேளை யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த இச்சபையின் தனிக் கௌரவம்மிக்க உறுப்பினரான கிராம அபிவிருத்தி அமைச்சர் (திருமதி விமலா கன்னங்கரா) இந்த உண்மையைச் சொல்வார் என எண்ணுகிறேன்.

திருமதி விமலா: நான் அவ்வேளை என்ன செய்திருக்க இயலும்?

அமிர்: நான் அதைக் கூறவில்லை.

"நான் பின்னர் பொலிஸ்மா அதிபருடனும் ஜனாதிபதியுடனும் தொடர்புகொண்டேன். கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி கேட்டேன். பொலிசாரே இவற்றைச் செய்கிறார்கள்என்பதை ஜனாதிபதியும் அப்போது அறிந்திருந்தார்.

"சபாநாயகர் அவர்களே; மறுநாள் அங்கு நடைபெற்றவைதான் மிகவும் கவனிக்கப் படவேண்டியவை. (ம)

## மலத்தீன் பற்றிய சட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் அதிகாரம் பெறாத தனியார் எவரும் மலத்தீனை வைத்திருப்பதையோ, விற்பனை செய்வதையோ இடத்துக்கிடம் கொண்டு செல்வதையோ தடைவிதிப்பதற்கான சட்டமூலம் ஒன்றினை சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜயசூரியா விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டபின்னர் மலத்தீன் இறக்குமதி தொடர்பான விடயங்கள் யாவும் தனிப்பட்ட அதிகாரி ஒருவரிடம் ஒப்படைக்கப்படவிருக்கிறது. (ந)

## காலமானார்

(யாழ்ப்பாணம்)

மலேசியாவில் வைத்தியத் துறையில் பிரசித்தி பெற்றவரும், மலேசிய மன்னர்களின் மதிப்பைப் பெற்றவருமான யாழ்ப்பாணம் சுண்டிக்குளியைச் சேர்ந்த டாக்டர் ரி. மார்க்கண்டு மலேசியாவில் காலமானார்.

இவர் தமிழ் தட்டச்சின் விசைப்பலகையை நிர்மாணித்த இரா. முத்தையாவின் மைத்துனருமாவார்.

## 'முரசொலி'யில்...

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் இல்லேயுள்ளனர் இந்தியாவில்! ஆம்! தமிழ் நாட்டில். அந்தத் தமிழ் இனத்தின் ஒரு பகுதி இலங்கையிலேயே வேட்டையாடப்படுவதை எப்படிச் சகித்துக் கொண்டிருக்கமுடியும்? இந்த உணர்வை அறியமாட்டாதவர் அல்ல பிரதமர் இந்திரா அம்மையார்!

"தாளுடாவிட்டாலும் தன் தசையாடும்' என்ற இரத்த பாசம்- இலங்கையில் அவதியுறும் தமிழ் இனம் குறித்து இங்குள்ள தமிழினத்துக்கு உண்டு.

"அந்தப் பாச உணர்வே! இதோ கண்ணீராக வழிகிறது! இரத்தக்கண்ணீராக வழிகிறது!

"இலங்கையில் துடித்திடும் தமிழ்ச்சாதி மக்களே! எங்கள் கண்ணீரைத்தான் உங்களைப் பாதுகாக்கும் கவசமாக எங்களால் தரமுடிகிறது! வேறென்ன செய்ய நாங்கள்? ஐயோ! வேறென்ன செய்ய நாங்கள்!"

## ஈரான்

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

செய்தால் நாட்டில் நிரந்தரமான கலவரங்கள் ஏற்படும். நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது. ஈரான்-ஈராக் யுத்தம் நீடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.'

ஜனாதிபதி பானிசதரின் இவ்வறிக்கை ஈரான் வானொலியிலோ, தொலைக்காட்சியிலோ ஒலிபரப்பப்படவில்லை. ஜனாதிபதியினால் இவ்வறிக்கை வெளியிடப்பட்டபோது அவரின் அலுவலகத்தில் புரட்சி காவல்படையினர் இயந்திர துப்பாக்கி சகிதம் காணப்பட்டனர். (வெ)

நாச்சிமார் கோவிலடிச் சம்பவம்:

# "நேரில் கண்டவர்கள் சாட்சியமளிக்கலாம்"

## பொதுமக்களுக்கு நீதிபதி கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

"பொலிஸ் சார்ஜன் கனகசுந்தரத்தின் உடலில் 3 துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன ஒருசன்னம் சத்திர சிகிச்சையின் போது எடுக்கப்பட்டது. இரண்டாவது சன்னம் என்னால் எடுக்கப்பட்டது. மூன்றாவது சன்னம் காணப்படவில்லை.

நாச்சிமார் கோவிலடி துப்பாக்கிசூட்டில் பலியான பொலிஸ் சார்ஜன் கனகசுந்தரத்தின் மரணவிசாரணையில் சட்டவைத்திய அதிகாரி எஸ். சரவணபவானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

பொலிஸ் தரப்பில், இன்ஸ்பெக்டர் கு. கிருஷ்ணதாசன் சமுகமளித்திருந்தார்.

சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சரவணபவானந்தன் மேலும் கூறியதாவது:- "காயத்திலிருந்து சுட்டவர், இறந்தவருக்கு வலது பக்கமாக நின்று சுட்டிருக்கிறார்."

நீத:- காயங்களிலிருந்து சுட்டவர் எங்கிருந்து சுட்டார் என்று கூற முடியுமா?- ஆம். ஆனால் எவ்வளவு தூரத்தில் இருந்து சுட்டார் என்று கூறுவது கஷ்டம்.

நீத:- சத்திர சிகிச்சையின் போது எடுக்கப்பட்ட சன்னத்தையும், நீர் கண்டெடுத்த சன்னத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தீரா?- ஆம். நான் பார்த்தேன் இரண்டும் ஒரு மாதிரியாகத்தான் இருந்தது. ஆனால் என்னால் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது.

நீத: காயத்திலிருந்து ஒருவரா அல்லது அதற்குமேற்பட்டவரா என்று கூறமுடியுமா? - திடமாகக் கூறமுடியாது.

நீத: புஞ்சி பண்டாவின் மரண விசாரணை அறிக்கைப்படி இறந்தவர் தலையின் பின் பக்கமாக சுடப்பட்டிருக்கிறார். புஞ்சிபண்டாவும், கனகசுந்தரமும் ஒரு துப்பாக்கியால் சுடப்பட்டிருக்க முடியுமா?- முடியும் திட்டவட்டமாக சொல்லமுடியாது.

நீதவான்: இறந்த கனகசுந்தரம் தனது மரணவாக்கு மூலத்தில், புஞ்சிபண்டாவும் தானும் 2பொலிஸாரும், ஒரு வாங்கில் அமர்ந்திருந்ததாகவும் அப்போது தாங்கள் சுடப்பட்டதாகவும், துப்பாக்கி சூடுகள் ஒன்றன்பின் ஒன்றாக சடுதியாக வெடித்ததாகவும் கூறியுள்ளார். இரண்டு பரிசோதனை அறிக்கையையும் ஒத்துப் பார்க்கும் போது இருவரும் ஒரே அடியாக இருந்த இடத்தில் சூடுவாங்கியிருப்பார்கள் என்று கூறமுடிமா?-

கனகசுந்தரத்தைப் பொறுத்த வரையில் வயிற்றில் உள்ள காயம் வாங்கில் அமர்ந்திருக்கும்போது சுட்டதனால் ஏற்பட்டிருக்கக் கூடும். நான் சடலத்தைப் பிரேத பரிசோதனை செய்த மேசையில் இருக்கும் நிலையில் அமர்த்திப் பார்த்தேன். அதன்படி இடது இடுப்பில் உள்ள சூட்டுக் காயத்தை இறந்தவர் இருந்த நிலையில் பெற்றிருக்க முடியாது. சுட்டவர் சுடும்போது குந்திக் கொண்டிருந்து சுட்டிருப்பார். புஞ்சிபண்டாவை பொறுத்த வரையில் அவரை சுட்டவர் பின்பக்கமாகவும், இடதுபக்கமாகவும் நின்று சுட்டிருக்கவேண்டும். கனகசுந்தரத்தை பொறுத்லவரையில் வயிற்றுக்காயம் வலது பக்கத்தில் உள்ளது. அப்படியானால் சுடடவர் வலது பக்கத்திலிருந்து சுட்டிருக்கிறார்.

சம்பவத்தை நேரில் கண்டவர் சாட்சியங்கள் இருந்தால் சாட்சியம் வைக்க முன்வருமாறு நீதவான் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்து விசாரணையை இம்மாதம் 18ம் தேதி ஒத்திவைத்தார். [க]

# புஞ்சிபண்டா மரணம் கொலை என்று தீர்ப்பு

[யாழ்ப்பாணம்]

நாச்சிமார் கோவிலடியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் மரணமானபொலிஸ்சார்ஜன்ட் புஞ்சிபண்டாவின் மரணம் கொலை என்று யாழ். நீதவான் திரு .ரி. ஜோகநாதன் தீர்ப்பளித்து நடவடிக்கை எடுக்கும் படி உத்தரவிட்டார்.

யாழ்.நீதிமன்றத்தில்நேற்றுக் காலைநீதவான் திரு. ரி.ஜோகநாதன் முன்னிலையில் பொலிஸ் சார்ஜன்ட் புஞ்சிபண்டாவின் மரணவிசாரணை நடைபெற்றது.

பொலிஸ் தரப்பில் இன்ஸ்பெக்டர் கமலேஸ்வரன் ஆஜரானார்.

பதில் பிரிவு வைத்திய அதிகாரியும், டாக்டருமான திருமதி ரஞ்சினி ராஜாரஜேஸ்வரன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"நான் யாழ். ஆஸ்பத்திரியில் புஞ்சிபண்டாவின் பிரேத பரிசோதனையைஇம்மாதம் 1-ம் திகதிநடத்தினேன்.மரணம்துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்டது. தலையின் பின் பக்கத்தில் ஒரு காயம் இருந்தது. அந்தக் காயம் துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்டது. துவக்குச் சூட்டுக் காயம் தவிர வேறு காயங்கள் இருக்கவில்லை.

"இழுபறிப்பட்டதன் காரணமாக ஏற்படக்கூடிய உரசல் காயமோ வேறு காயமோ காணப்படவில்லை. தலையில் பின்புறத்தில் நடுக் கோட்டுக்கு இடது பக்கத்தில் காயம் காணப்பட்டது.

"சுழல் துப்பாக்கியால் சுடப்பட்டிருக்கக் கூடும். ஆனால் எந்த விதமான சுழல்துப்பாக்கி என என்னால் கூறமுடியாது".

நீத: இந்தக்காயத்திலிருந்து இறந்தவர் பின்பக்கமாக இருந்து சுடப்பட்டார் எனக் கூறமுடிமா? ஆம்.

நீத: காயத்தின்படி எவ்வளவு தூரத்திலிருந்து சுடப்பட்டார் எனக் கூறமுடியுமா? -2 அல்லது 3 அடிக்கு அப்பால் நின்று சுடப்பட்டிருக்கலாம்.

நீத: அன்றைய தினம் 4 பொலிசாரும் வாங்கில் அமர்ந்திருந்தனரென்றால் அவர்கள் இருக்கும்பொழுதா அல்லது நிற்கும் பொழுதா சூடு விழுந்திருக்கிறதென்பதை காயத்திலிருந்துகூறமுடியுமா? - சரியாகக்கூறமுடியாது.

நீத: சுட்டவர் நின்ற நிலையையும் பொறுத்தது அது?- ஆம்.

நீதவான் விசாரணையின்பின் கொலை எனத் தீர்ப்பளித்தார். [க]

# சூரிய சக்தியில் இயங்கும் விமானம்!

பாரிஸ், ஜூன். 13

சூரிய சக்தியில் பறந்து செல்லும் 198 ரூத்தல் எடையுள்ள உலகின் முதலாவது விமானம் பாரிஸில் இருந்து லண்டனிற்கு இவ்வார இறுதியில் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இவ்விமானம் ஆகாயத்தில் மூன்று கிலோ வோட்ஸ் மின்சாரத்தின் உதவியுடன் பறந்து செல்லுமென்றும் பின்னர் அது சூரிய சக்தியில் இயங்குமென்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்விமானம் லண்டனிலுள்ள 'குரைடன்' விமான நிலயத்தில் தரையிறங்கும். 498 அடி உயரத்திலிருந்து 16,000 அடி உயரம் வரை 8 மணித்தியாலயத்திற்கு இவ்விமானம் பறந்து செல்லுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

'சலன்ஜர்' என்ற இவ்விமானத்தின் பரிட்சார்த்தமுயற்சி வெற்றியளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [வெ]

# தாக்குதலுக்கு ஒருவர் தையிட்டியில் பலி!

[யாழ்ப்பாணம்]

தையிட்டியைச் சேர்ந்த இளையவன் சின்னமணி என்ற தொழிலாளி தாக்குதலுக்குப்பலியானார்.

யாழ். மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

இம்மாதம் 7ம் திகதி இரவு கிட்டினர் என்பவர் வீட்டில் நடந்த சம்பவததில் காயமடைந்தவரை தாக்கிசென்றது தொடர்பாக, ஏற்பட்ட பிரச்னையால், சந்தேக நபர்கள் இருவர் பதுங்கியிருந்து தாக்கியதாக கூறப்படுகிறது.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட மரணவிசாரணை அதிகாரி சந்தேக நபர்களான பத்திநாதன், மகேந்திரன் ஆகியோரை கைது செய்யுமாறு காங்கேசன்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார். [க]

## முழு அளவில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பொலிஸ் அதிபர் திரு.பெனட் பெரேரா, 7. உதவிப்பொலிஸ் அதிபர் திரு. எம். எஸ். ஸ்டீபன், 8. இன்ஸ்பெக்டர் திரு. செல்வரத்தினம், [9] இன்ஸ்பெக்டர் திரு. சர்வானந்தன். ]10] இன்ஸ்பெக்டர் திரு. ராமச்சந்திரன். [11] இன்ஸ்பெக்டர் திரு. முருகேந்திரன். ]12[ இன்ஸ்பெக்டர் திரு.சி நடராஜா. [13]இன்ஸ்பெக்டர் திரு. கலன்சூரிய [14] இன்ஸ்பெக்டர் ஜனுப் மீடின் [15] உதவி இன்ஸ்பெக்டர் திரு.ஞானப்பிரகாசம் 16. உதவி இன்ஸ்பெக்டர் திரு. மகேந்திரன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இவர்களுடன் அரசாங்கப் பகுப்பாய்வாளர் திரு. மெண்டிசும் பொலிஸ் படப்பிடிப்பாளர்கள் இருவரும் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

### ஃ விசாரணையில் முதல்கட்டம்

விசாரணையில் முதல்கட்டமாக சம்பவம் நடைபெற்ற சகல இடங்களையும் இப்பொலிஸ்குழு பார்வையிடும்.

முதலில் நாச்சிமார் கோவிலடிக்கு விஜயம்செய்யும் இப்பொலிஸ்குழு, அதனைத்தொடர்ந்து யாழ். நகரிலும் ஏனைய பகுதிகளிலும் சம்பவம் நடைபெற்ற இடங்களைப்பார்வையிடும்.

### ஃ பிரிவுபிரிவாக விசாரணை

உயர் மட்டப்பெலிஸ் குழுவின் விசாரணை பிரிவு விரிவாக நடைபெறும். ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு பொலிஸ் அதிபரும், உதவிப் பொலிஸ் அதிபரும் தலைமை வகிப்பார்கள்.

இக்குழுவினர் சம்பவம்நடைபெற்ற இடங்களுக்குச்சென்று சாட்சியங்களைப் பதிவுசெய்து கொள்வார்கள். இவர்கள் பாதிக்கப்பட்ட கடைகள்,வீடுகள், மற்றும் நிறுவனங்களுக்கும் சென்று சேத விபரங்களையும் மதிப்பீடு செய்வார்கள்.

### ஃ முழுஅளவில் விசாரணை

இன்று ஆரம்பமாகும் விசாரணை தொடர்பாக விசாரணை குழுவின் தலைவர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்துடன் "ஈழநாடு" நேற்றிரவு தொடர்பு கொண்டபோது விசாரணை முழுஅளவில் நடைபெறும் என்று தெரிவித்தார்.

அவசரகாலச்சட்டம் அமுலில் இருந்த காலப்பகுதியில் நடைபெற்ற வன்செயல்கள் தொடர்பாகவும் இப்பொலிஸ் குழு விசாரணை நடத்தும் என்றும், இதற்கான அனுமதியையும் சில அதிகாரங்களையும் இக்குழு பெற்றுள்ள தென்றும் தெரியவருகிறது

### ஃ கடுமையான நடவடிக்கை

விசாரணைக்குள்ளாகும் சம்பவங்களில்சம்பந்தப்படுவோரை வெளியூர்களிலிருந்து வரவழைக்கும்அனுமதியைப்பெற்றுள்ள இப்பொலிஸ் குழு; சாட்சியங்கள் மூலமாக குற்றவாளிகளாக அவர்கள் காணப்படும் பட்சத்தில் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளும் அதிகாரத்தையும் பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

# ஈரான் பூகம்பம்: 1400 சடலங்கள் மீட்பு!

தெஹ்ரான், ஜூன். 13

ஈரானின் கெர்மான் மாகாணத்திலுள்ள ஹொல்டன் நகரில் இடம்பெற்ற பூகம்பத்தின் போது பலியானவர்களில் 1400 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டு நேற்று அடக்கம் செய்யப்பட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இப்பூகம்பத்தின் போது பலியான ஏனையவர்களின் சடலங்களை மீட்பதில் தொண்டர்கள் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இப்பூகம்பத்தினால் இடம்பெற்ற சேதங்கள் பற்றி இன்னும் மதிப்பீடுசெய்யப்படவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [வெ]

## ஐந்து பொலிசார்.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

ஜூன் 2ம் திகதி இரவு யாழ்ப்பாணத்தில் ஏராளமான வீடுகள், கட்டிடங்கள் முதலியவை தீயிடப்பட்டதற்கும், சேதப்படுத்தப்பட்டதற்கும் இந்த ஐவருமே பின்னணியாக இருந்ததாகக்கருதப்படுகின்றது.

அன்றைய தினம் இரவு யாழ்ப்பாணத்தில் கடமையிலிருந்த பொலிஸ் உயர் அதிகாரிகளின் அறிக்கைகளையடுத்தே பொலிஸ் மா அதிபர் திரு.அனுசெனவிரத்தன இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறார். இந்த ஐவரும் பல அதிகாரிகவால் அடையாளம் காட்டப்பட்டுள்ளனராம். நாச்சிமார் கோயிலடி சம்பவத்தையடுத்து பொலிசார் கட்டுமீறி நடந்து கொள்வதற்கு இந்த ஐவருமே தூண்டுதலாக விருந்தனராம்.

இதே சமயம் பொலிஸ்மா அதிபர் 'உள்ளக' விசாரணை ஒன்றுக்கும் உத்தரவிட்டிருக்கின்றார். இந்த விசாரணைகளில் குற்றவாளிகளாகக் காணப்படுகிறவர்கள்மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படவிருக்கின்றது.

## யாழ். வன்செயல்கள்

### 'அத்த' பத்திரிகை படங்களுடன் செய்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றவன்செயல்கள், தீவைப்புகள், போன்ற சம்பவங்கள் தொடர்பான செய்தித் தொகுப்பொன்றை 'அத்த' பத்திரிகை அதன் 12ம் திகதி பதிப்பில் வெளியிட்டுள்ளது.

'அத்த' பத்திரிகை கம்யூனிஸ்ட் கட்சியின் தினசரி சிங்கள பத்திரிகை என்பது குறிப்பிடத்தக்கது.

கம்யூனிஸ்ட்கட்சி பொதுச் செயலாளர் திரு. பீட்டர் கெனமன் வடபகுதிக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்ட படத்துடன் வன்செயல்களுக்கான இடங்களின் படங்களும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. தீயிடப்பட்ட பொது நூலகம், நகரின் பொது சந்தை, ஈழநாடு காரியாலயம் போன்ற படங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

# உலக ஏழைகள் 100 கோடி?

லண்டன், ஜூன். 11

1980 களின் இறுதியில் உலகத்திலே உள்ள ஏழைகளின் தொகை 80 கோடியிலிருந்து 100 கோடியாக அதிகரிக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் யார்வதேச பராமரிப்பு நிதிசத்தின் [யுனிசெவ்] நிறைவேற்று நெறியாளர் திரு. ஜேம்ஸ் கிராண்ட் அண்மையில் இத்தகவலை வெளியிட்டார்.

இக்கால எல்லை 'இரண்டாவது அபிவிருத்தி தசாப்த'மாக ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலையம் அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper at the General Post Office, Sri Lanka
Regd No. QB 100266/81 P. O. Box 49, Jaffna. தந்தி/தொலைபேசி: 7707